**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.30/2019 – P.W. – 15**

Deposition of witness for Prosecution:

Name : திரு. பாலசுப்பிரமணியன் Father's Name. இருளப்பன்

Village : கண்ணெரிந்தால்கட்டளை வயது 56

Date : 02.04.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 02.04.2025.

**(எதிரி ஆஜர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது கண்ணெரிந்தால்கட்டளை என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எதிரிகளில் 1ம் எதிரி L. S. E. பழனியப்பனை மட்டும்தான் தெரியும். இதர எதிரிகளை தெரியாது. மேற்படி பழனியப்பனிடம் கூட எனக்கு பேச்சு வார்த்தையோ, அறிமுகமோ இல்லை. முன்னாள் அமைச்சர் ஓ. எஸ். மணியனை பார்த்துள்ளேன். ஆனால் அவரிடமும் எனக்கு எந்தவித பழக்கவழக்கமும் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

கடந்த 28.01.2010ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் மருதூர் தெற்கு, கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் வெங்கடச்சலத்தேவர் மகன் திருமணத்தில் எங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஓ. எஸ். மணியன் அந்த திருமணத்தை நடத்தி வைத்தார் என்றும், அந்த திருமணத்தில் அ.சா.1உடன் நானும், அம்மா பேரவை செயலாளர் மருதூர் மூர்த்தி, ஆதலூர் ஜீவானந்தம் ஆகியோர்கள் இருந்தனர் என்றும், மேற்படி திருமணத்தை முடித்துவிட்டு வெளியே வரும்போது, மேற்படி 1ம் எதிரி அ.சா.1ஐ பார்த்து கொலை மிரட்டல் விடுத்தாகவும், அவரை மானபங்கப்படுத்த வேண்டும் என்று வேட்டி மற்றும் டவுசரை பிடித்து இழுத்து தாக்கியதாகவும், 1ம் எதிரி அவரை கழுத்தில் குத்தினார் என்றும், சம்பவத்தை நேரில் பார்வையிட்டேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரங்களை மறைத்து தற்போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**. இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**